1995 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *288*, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை.

வினா எண் *289*, திரு, கே. செல்வராஜ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

289—

கோயம்புத்தூர் குடிசைப் பகுதிகளில் வீட்டுவசதி வாரிய வீடுகள் கட்டுதல்

**39973*—திரு. கே. செல்வராஜ்.:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், உக்கடம், செம்பட்டி காலனி குடிசைப் பகுதி ஆகிய இடங்களில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே இவ்வினா எழவில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, உக்கடம், செம்பட்டி காலனி பகுதியில் சுமார் *40* ஆண்டுக்காலமாக குடிசைகளில் நில வாடகைக்கு இருந்து வருகிறார்கள். அந்தக் குடிசைகளுக்குப் பதிலாக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதாகக்கூட அந்த வாரியத்தினுடைய தலைவரே வந்து பார்வையிட்டு வேலைகள் ஆரம்பிப்பதாக உறுதி கூறியுள்ளார்கள். அந்தப் பகுதியிலுள்ள *1200* குடிசைகள் *40* ஆண்டுக்காலமாக, சுதந்திரம் பெற்றதிலிருந்து இதுவரை அவர்களுக்கு யாருமே வீடுகள் கட்டிக் கொடுக்காத சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மீண்டும் பரிசீலனை செய்து வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[*1995 ஏப்ரல் 10*

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், உக்கடம், கெம்பட்டி காலனி பகுதியில் உள்ள நிலம் சுமார் 100 தனியார் நபர்களுக்குச் சொந்தமானது ஆகும். இந்நிலம் தனியாருக்குச் சொந்தமானதால் இப்பகுதியில் வீடுகள் கட்ட இயலாமல் உள்ளது. இந்நிலங்களை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு மனை ஒன்றிற்கு ரூபாய் 5 ஆயிரம் வீதம் விற்க சம்மதம் தெரிவிக்குமாறு நிலச் சொந்தக்காரர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்நில உரிமையாளர்கள் அனைவரும் சம்மதித்தால் இக்குடிசைப் பகுதிவாழ் மக்களைக் கலந்தாலோசித்து வீடுகள் கட்டவோ அல்லது மனைகள் மேம்பாட்டுப் பணிகள் அமைத்து மனைப்பட்டா வழங்கவோ முடிவு செய்யப்படும்.

முற்பகல் 10-25

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்களும், குடிசை மாற்று வாரியத்தினுடைய அதிகாரிகளும் கலந்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தபோது, அந்த இடத்தை குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுப்பதற்கு சம்மதித்து கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கையெழுத்திட்டுக் கொடுத்த கடிதமும் குடிசை மாற்று வாரியத் தலைவரிடத்திலும் நிர்வாக இயக்குநரிடத்திலும் இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கனிவுகூர்ந்து பரிசீலனை செய்து, இந்த ஆண்டே அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனை ஒன்றுக்கு ரூபாய் 5000 வீதம் விற்க சம்மதித்து நிலச் சொந்தக்காரர்கள் சம்மதக் கடிதம் கொடுத்திருந்தால் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் பணிகள் வரும் ஆண்டில் அல்லது அதற்கு அடுத்து வரும் நிதி ஆண்டில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 290, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.